சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.109/2018</u>

27.10.2025

வா.சா.2 திரு.ஆனந்த், த/பெ. தெட்சிணாமூர்த்தி

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் பேரில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 6 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். வாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அசல் வழக்கில் எனக்கு சம்மன் அனுப்பப்பட்டு சம்மனை நான் வாங்கினேன் என்றால் சரிதான். அசல் வழக்கில் நான் ஆஜராகவில்லை என்றால் சரிதான். 3 முதல் 5, 7, 8 பிரதிவாதிகள் எனது சகோதர, சகோதரிகள் என்றால் சரிதான். 9 முதல் 11 பிரதிவாதிகள் எனது சகோதரர் செல்வராஜின் மனைவி மற்றும் அவரின் குழந்தைகள் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தை சேர்ந்த 3 முதல் 11 பிரதிவாதிகள் யாரும் இவ்வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சேகர் தாவா சொத்தை அவருக்கு கிரயம் செய்துக்கொடுக்க வேண்டும் என அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் எதற்காக வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சாட்சி கேள்வி கேட்ட பின்னிட்டும் பதில் அளிக்காமல் உள்ளார். முதல்விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லி எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு விவரங்கள் எதனடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் நான் எனது தகப்பனாருக்கு மகன் என்ற வகையில் தெரியும். அசல் வழக்கு எனக்கு எதிராகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை மேல்நடத்தாமல் நான் இருப்பதற்கு என்ன காரணம் என்றால் அதற்காக தான் தற்போது சொல்ல வந்துள்ளேன். அசல் வழக்கில் எனது சகோதரர் சேகர் என்ன சொல்லியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, எனக்கு தெரியாது. எனது சகோதரருக்கும் எனது முதல்விசாரணை தயார் செய்த வழக்கறிஞர் தான் வழக்கறிஞராக ஆஜராகியுள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரர் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தையே நானும் எனது

முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் 1969 ல் பிறந்தேன். நான் எனது பள்ளிபடிப்பை 1984 ல் முடித்தேன். முதல்விசாரணையில் 1951 ல் ஏற்பட்ட ஆவணங்கள் பற்றி குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தகப்பனார் சொல்லி தெரியும். எனது முதல்விசாரணையில் 27.07.1974 ல் விஜயராகவனுக்கு பகுதிக்கு விடப்பட்டதாகதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனது சகோதரர் 27.07.1994 விஜயராகவனுக்கு பகுதிக்கு விடப்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் சாட்சியாக உள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரர் 1994 ல் பகுதிக்கு விடப்பட்டதாக சொன்னதை நான் எதனடிப்படையில் 1974 ல் பகுதிக்கு விடப்பட்டதாக சொல்கிறேன் என்றால் எனது சகோதரர் தவறுதலாக சொல்லியுள்ளார். எனது சகோதரர் முதல்விசாரணையில் என்ன சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் படித்த விவரம் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதில் எனக்கு அப்போது 3 வயது இருக்கும் என்றால் சரிதான். நான் 1984 ஆம் வருடமே தொழிலுக்கு வந்துவிட்டேன். 1984 வரை எனக்கு நேரடியாக 1, 2 பிரதிவாதிகள் குடும்ப விவரம் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். 1, 2 பிரதிவாதிகள் எனக்கு நெருங்கிய உறவினர்கள் இல்லை என்றால் சரியல்ல, உறவினர்கள் ஆவார்கள். எனது பெரிய அண்ணனின் மனைவி வழி சொந்தம். எனது பெரிய அண்ணனுக்கு 1979 ல் திருமணம் ஆனது. நான் சொல்வது போல் எங்களுக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் எவ்வித நெருங்கிய உறவும் இல்லை என்றாலும் பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கில் கண்ட குறைகளை சரிசெய்வதற்காக எனக்கு சம்மன் அனுப்பி நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் அதனை மதித்து நான் சாட்சியமளிக்கிறேன். அசல் வழக்கில் நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்த போது அதனை மதித்து ஏன் ஆஜராகவில்லை என்றால் சாட்சி கேள்வியை கேட்ட பின்னிட்டும் பதில் எதுவும் அளிக்கவில்லை. சாட்சி பல கேள்விகளுக்கு பதில் அளிக்காமலும் தூங்குவது போல் கழுத்தை சாய்ந்துக்கொண்டு பதில் அளிக்காமல் இருந்ததால் அவரிடம் கேட்டதற்கு சாட்சி தூங்கவில்லை என பதில் அளித்தார். சாட்சியின் வழக்கறிஞரின் இளம் வழக்கறிஞர் திரு.தியாகராஜன் கேட்கும் கேள்விக்கு பலமுறை பதில் சொல்லுங்கள் என சொன்ன பிறகும் சாட்சி பதில் அளிக்கவில்லை. சுப்பையா மெடிக்கலில் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் எந்த

வருடம் வேலைக்கு சேர்ந்தார் எவ்வளவு மாத வருமானத்தில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் சொற்ப வருமானத்தில் வேலை செய்துவந்தார். சொற்ப வருமானம் என்றால் எவ்வளவு என்றால் வாங்கிய நபருக்கு மட்டும் தான் தெரியும். தாவா சொத்து சம்பந்தமாக வேறு வழக்குகள் நடந்துள்ளதா என்றால் இல்லை, இந்த வழக்கு மட்டும்தான். திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.38/2006 என்ற வழக்கு நடைப்பெற்றதா என்றால் இல்லை, இந்த வழக்கு மட்டும்தான் நடக்கிறது. எனக்கும் எனது சகோதரர் சேகருக்கும் மனவருத்தம் உள்ளதா சுமூகமாக உள்ளோமா என்றால் சுமூகமாதான் இருந்து வருகிறோம். தாவா சொத்து சம்பந்தமாக எனது சகோதரர் சேகர் இந்த வழக்கை தவிர வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.38/2006 ன் எனது தகப்பனார் இறந்த பின்னிட்டுதான் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்தி வழக்கு போட்டார். தெட்சிணாமூர்த்தி இறந்த பின்னிட்டு 1, 2 பிரதிவாதிகள் வழக்கை நடத்தினார்கள் என்றால் சரிதான். அ.வ.எண்.38/2006 ல் 1, 2 பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்ட விவரம் தெரியும் என்றால் சரிதான். அதனையடுத்து எனது சகோதரர் மே.மு.எண்.28/2019 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்றால் சாட்சி பதில் அளிக்காமல் சிரிக்கிறார். மேல்முறையீட்டு வழக்கிலும் எங்கள் குடும்பத்தை சேர்ந்த அனைவரும் தரப்பினராக உள்ளோம் என்றால் சரிதான். எனது குடும்ப உறுப்பினர்கள் அனைவரின் முகவரியும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சேகர் தாக்கல் செய்த மேல்முறையீட்டில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணையை பெற்றபின்னிட்டு எங்கள் குடும்பத்தை சேர்ந்த யாரும் ஆஜராகி வழக்கை மேல்நடத்தவில்லை என்றால் சரிதான், சுமூகமாக பேசிக்கொள்ளலாம் என தெட்சிணாமூர்த்தியின் மகன்கள் சொன்னதால் மேல்நடத்தவில்லை. அசல் வழக்கை 2006 ல்தாக்கல் செய்தபோதே தெட்சிணாமூர்த்தியின் வாரிசுகள் சுமூகமாக பேசிக்கொள்ளாலம் என சொன்னார்கள். 2006 ஆம் வருடம் அசல் வழக்கை தெட்சிணாமூர்ததியின் வாரிசுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் கேள்வி கேட்ட பின்னிட்டும் சாட்சி பதில் அளிக்கவில்லை. மேல்முறையீட்டு வழக்கு மற்றும் இந்த வழக்கும் தாக்கல் செய்த பின்னிட்டாவது தெட்சிணாமூர்த்தியின் வாரிசுகள் சமாதானமாக போய்கொள்ளலாம் என சொன்ன விவரத்தை ஏன் சொல்லவில்லை என்றால் சாட்சி

பதில் எதுவும் அளிக்கவில்லை. இந்த அசல் வழக்கையும் மேல்முறையீட்டு வழக்கையும் எனது சகோதரர் சேகர் மட்டுமே தாக்கல் செய்துள்ளார் என்றும் தெட்சிணாமூர்த்தியின் வாரிசுகள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சாட்சி கேள்வி கேட்ட பின்னிட்டும் பதில் எதுவும் அளிக்கவில்லை. வா.சா.ஆ.13 ஆவணத்தின்படி சேகர் அசல் வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு 1, 2 பிரதிவாதிகள் எங்கள் குடும்பத்தை சேர்ந்த அனைவருக்கும் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் அசல் வழக்கு எண் 38/2006 வழக்கை பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அறிவிப்பை பெற்றுக்கொண்ட நாங்கள் யாரும் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சாட்சி பதில் எதுவும் அளிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண் 38/2006 தீர்ப்பில் பிறப்பிக்கப்பட்ட நகல் என்றால் சரிதான். அதில் நானும் தரப்பினராக உள்ளேன் என்றால் சரிதான். தீர்ப்பின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். தாவா அடிமனை சொத்தை பொறுத்து நகர குடியிருப்போர் சட்டத்தின் கீழ் எனது சகோதரர்களுக்கு உரிமையுள்ளது என்ற அடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளோ அவரின் தகப்பனாரோ சொத்தை காலி செய்ய சொல்லி இந்நீதிமன்றத்தில் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதனடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் சேத்துபட்டில் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் எனது சகோதரர்களும் தகப்பனாரும் சொன்னதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் சேத்துபட்டில் எந்த பகுதியில் இருந்ததாக குறிப்பிட்டு சொன்னார்களா என்றால் சொல்லவில்லை. 1, 2 பிரதிவாதிகள் எந்த கல்லூரியில் படித்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் சென்னையில் படித்தார்கள். முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை தான் அ.வ.எண்.38/2006 வழக்கில் சொல்லி கட்சி செய்தோம் என்றால் சரிதான். 38/2006 வழக்கை நாங்கள் நடத்தினோமா என்றால் நாங்கள் நடத்தவில்லை. ஆனால் 20 வருடங்களாக 1, 2 பிரதிவாதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்திவருகிறோம். பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். அ.வ.எண்.38/2006 வழக்கு கட்டிடம் சீர்செய்வதற்காக போடப்பட்டது. நான் சொல்வது போல் 1, 2 பிரதிவாதிகளிடம் தாவா சொத்து சம்பந்தமாக எந்தக்காலத்திலும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்றால் சரியல்ல. நானோ எனது சகோதரரோ பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரத்தை

முதல்விசாரணையில் சொல்லியுள்ளோமா என்றால் முதல்விசாரணையில் சொல்ல வாய்ப்பு வரவில்லை, தற்போது வாய்ப்பு வந்ததால் சொல்லியுள்ளேன். ரூ.31,000/- செலவு செய்து மேற்கூரை எழுப்பியதாகதான் அ.வ.எண்.38/2006 ல் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். 1981 ல் நடேசசெட்டியாருக்கு விற்பனை செய்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். 1981 ல் எனக்கு 12 வயது இருக்கும். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை. எனது தகப்பனார் போட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பனார் தெட்சிணாமூர்த்தி 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் தெட்சிணாமூர்த்திக்கு தாவா சொத்தில் வாடகைக்கு இருந்து செலுத்திய வாடகை ரசீதுகள் என்றால் சரியல்ல. மனைப்பகுதிக்காக எனது தகப்பனார் செலுத்தியுள்ளார். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மனை பகுதிக்காக என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாடகை ரசீது என்று போடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள போட்டோக்களில் உள்ள கட்டிடம் தாவா சொத்தில் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்கூரை எதுவும் போடவில்லை என்றால் சரிதான். ஆனால் தற்போது பாதி போடப்பட்டுள்ளது, பாதி இல்லை. எனது சகோதரர் என்ன சாட்சியமளித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சாட்சி சம்மன் வந்த பின்னிட்டு சேகரை கலந்து பேசினேனா என்றால் கலந்து பேசிதான் ஒரே வழக்கறிஞரை நியமித்துள்ளோம். தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தில் மேற்கூரை பாதி இருப்பதாக மிகைப்படுத்தி நான் சொல்கிறேன் என்றால் இல்லை. தாவா சொத்தில் நாளது தேதிவரை கமலாம்பிகா பிரஸ் நடத்தப்பட்டு வருகிறதா என்றால் நடத்தப்பட்டு வருகிறது. பிரஸ் நடத்துவதற்கு 3 குதிரை திறன்களை கொண்ட மின்இணைப்பு இருக்கவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள கட்டிடத்திற்கு மின்இணைப்பு செலுத்தியதற்கான மின் கட்டண ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இந்தவழக்கில் தாக்கல் செய்யவில்லை, பழைய வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.38/2006 வழக்கில் எங்கள் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். இன்றுவரை கமலாம்பிகா பிரஸ் நடந்துவருகிறது என்பதை காட்ட ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 2006 ஆம் வருடத்திலேயே தாவா சொத்திலிருந்த மேற்கூரை சிதிலமடைந்துவிட்டது என்றாலும் அதிலிருந்து

கமலாம்பிகா பிரஸ் நடைபெறவில்லை என்றாலும் பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் திருவாரூர் வர்த்தக சங்கத்தில் செயலாளர் மற்றும் துணைத்தலைவராக 7 வருடங்கள் இருந்துள்ளேன். எனவே வியாபாரம் சம்பந்தப்பட்ட விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். கமலாம்பிகா பிரசில் ஆரம்பம் முதல் இன்றுவரை எத்தனை நபர்கள் இருந்துவருகிறார்கள் என்றால் ஆரம்பத்தில் 10 நபர்களும் தற்போது 2 நபர்களும் இருந்துவருகிறார்கள். அவர்களுக்கு உண்டான சம்பள பதிவேட்டின் ஆவணங்கள் வைத்துள்ளோமா என்றால் வைத்துள்ளோம். அந்த ஆவணங்களை இன்று வரை தாக்கல் செய்யவில்லை என்றால் இனிமேல் தாக்கல் செய்வேன். தாவா சொத்து நகர பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ளது என்றால் சரிதான். நகர எல்லைக்குட்பட்ட இடத்தில் கட்டிடம் கட்ட நகராட்சி அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தில் நாங்கள் கட்டிடம் கட்டியுள்ளதாக சொல்லியுள்ளதற்கு அனுமதி பெற்றுள்ளோமா என்றால் புதிதாக கட்டிடம் கட்டவில்லை. முதல்விசாரணையில் தாவா சொத்தில் புதிதாக கட்டிடம் கட்டியதாக சொல்லப்பட்டுள்ளதா அல்லது சீரமைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் சீரமைப்பதற்காக தான் என்று சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. பதிவு அலுவலகத்தில் நகல் வாங்கி பார்த்தால்தான் தெரியவரும். வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு இதுநாள்வரை நகல் ஏதேனும் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 எற்பட்ட விவரம் தெரியும். அதில் முதல்பக்கத்தில் உள்ள எழுத்துக்கள் சரியாக தெரியாதது தற்போதுதான் எனக்கு தெரியும். 1, 2 பிரதிவாதிகள் குப்பைகளை போடுவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் குப்பையை மேலிருந்துதான் போடமுடியும். குப்பைகள் போடுவது குறித்து எங்காவது புகார் கொடுத்துள்ளோமா என்றால் சாட்சி கேள்விக்கு பதில் அளிக்காமல் சண்டைக்காரர்களால்தான் புகார் கொடுத்தேன் என பதில் அளிக்கிறார். எனது சகோதரரே குப்பைகளை கொட்டியதாக சொல்லாத நிலையில் குப்பையை கொட்டியதாக சகோதரருக்காக வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் குப்பையை கொட்டியிருந்தால் போட்டோக்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அசல் வழக்கிலும் மேல்முறையீட்டு வழக்கிலும் எங்களுக்கு கட்சி எதுவும் இல்லாததால் எனது சகோதர் சொன்ன வாக்குமூலத்தையே நான் திரும்ப தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கமலாம்பிகா பிரஸை தவிர ஜாலிஸ்பார்டு என்ற கூல்டிரிங்க்ஸ் கடையும், சோழா பாலீதின் என்ற கடையும் நடத்திவருகின்றோம். கூல்டிரிங்க்ஸ் கடை பாலீதின் கடை நடத்திவரும் விவரத்தை எனது முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளோம். வழக்கில் எந்த கட்சியும் இல்லாததால் நானும் எனது குடும்பத்தாரும் 20 வருடங்களாக வழக்கை இழுத்தடிக்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எந்த கடையும் நடத்தவில்லை என்றாலும் மேற்கூரை சிதிலமடைந்துள்ளது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் கமலாம்பிகா பிரஸ், கூல்டிரிங்க்ஸ் கடை, பாலீதின் கடை நடத்துவதை நிரூபிக்க ஆணையரை நியமிக்க தயராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வாதி எனக்கு சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.